முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பத்ரகிரியார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

29.09.2018, சனிக்கிழமை

1. **தரும சக்தியே அரங்கா போற்றி**
**தன்னார்வ தொண்டு பெருக்கி**
**கரும வினை போக்கும் அண்ணலே**
**கலியுக ஞானியே போற்றி போற்றி**

2. போற்றியே உலக மக்களெல்லாம்
பூவுலகில் உன் புகழ் பரப்ப
ஆற்றல் பெருக்கம் கண்டு
அழியாமை பெறுவரெனக் கூறி

3. கூறியே ஒளி சூட்சும நூலை
குவலயத்தில் **விளம்பி தரிவை திங்கள்**
**தெரியவே முன்னான்கோர் திகதி புகர் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 13ம் நாள் 29.09.2018, சனிக்கிழமை)**
**தேசிகனுக்கு பத்ரகிரியார் யானும்**

4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர் ஞான அரங்கன் கொள்கையை
ஞான யுகம் அமைய வேண்டியே
ஞானபண்டிதன் இயக்கி வருக

5. வருகவே கலிகால மக்களே
வணங்கி அரங்கமகா ஞானியை
குருவே என ஏற்று வருக
குடில் தொண்டில் இணைந்து நன்கு

6. இணைந்துமே சேவை பெருக்கி
எல்லாம் ஆறுமுகன் செயலே என
இணையிலா வழிபாட்டை பெருக்கி
என்னாளும் செபதபம் தொடர

7. தொடரவே துன்பங்கள் விலகும்
தொடரவே எதிர்மறை இன்னல்
இடை கண்டம் ஏவல் ஓமல்
எல்லா சிக்கலும் விலகி நின்று

8. விலகியே மக்களிடை பாதுகாப்பு
வினை மிஞ்சா பெருவாழ்வாய்
ஞாலமதில் சகல பாதுகாப்புடன்
ஞானமும் பெற்று சிறப்படைவர்

9. சிறப்பு தரும் அரங்கன் மலரடி
சேவித்து தொடர்ந்து வர
பிறப்பு இனி இல்லா வாழ்வாய்
பேதமற சமதர்மம்பட வாழ்ந்து

10. வாழ்ந்து அரங்க மகானின்
வல்லமை கூட சிறந்துமே
தாழ்விலா ஏற்றம் காண்பர்
தரணியில் ஞான வாழ்வு கண்டு

11. கண்டுமே தேவைகள் பூர்த்திபட
கலியில் சகல சௌபாக்கியம்
தொண்டு வழியே அடைவர்
தெரிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் பத்ரகிரியார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா தருமபலம் கொண்ட தருமசக்தியே அரங்கமகாதேசிகனே போற்றி போற்றி, தன்னார்வ தொண்டுகளை உலகினில் பெருக்கி தொண்டு பலனாலும், தர்மபலத்தாலும் மக்களின் முன் ஜென்ம பாவங்களான கர்மவினைகளை போக்கி காக்கின்ற அண்ணலே கலியுகத்தின் மகா ஞானியே அரங்கா போற்றி போற்றி, உத்தம மகா ஞானி அரங்கா உம்மைப் போற்றி வணங்கி உலக மக்களெல்லாம் ஆற்றல் பெருக்கத்தினை காண்பார்கள் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 13ம் நாள் 29.09.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பத்ரகிரியார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பத்ரகிரியார்.

உயர் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உயர் ஞான கொள்கைகளை உலகினில் ஞானயுகம் அமைய வேண்டியே உலகமெங்கும் அரங்கன் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகின்றார் ஞானத்தலைவன் முருகப்பெருமான்.

ஆதலினால் கலியுக மக்களே உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனை உளமார குருவாய் ஏற்றுக் கொண்டு பயபக்தியுடன் வணங்கி வருவதுடன் அரங்கன் உலக நலனிற்காக நடத்துகின்ற தானதருமப் பணிகளில் தளராது தொண்டுகள் செய்தும், பொருளுதவிகள் செய்தும் வருவதுடன் நடப்பதெல்லாம் முருகப்பெருமானின் செயலே என ஒருமனதாய் ஏற்றுக் கொண்டு முருகப்பெருமானின் இணையில்லா திருவடியை வணங்கி வழிபாடுகளைப் பெருக்கி நாள்நாளும் தவறாமல் நாமஜெபங்களை பெருக்கி தொடர்ந்து வரவர, அவரவரின் துன்பங்கள் விலகும். தொடர்ந்து வழிபாடுகள் செய்து வர, எதிர்மறையான செயல்களால் வருகின்ற துன்பங்கள் எல்லாம் விலகிவிடும் இடைகண்டங்கள் வாராது, ஏவல் ஓமல் எனும் வஞ்சனையான அரூப நிலை துன்பங்களும் விலகுவதோடு அவரவரைப் பற்றிய எல்லா சிக்கல்களும் விலகி மக்களுக்கு பாதுகாப்பு பெருகிடும். பாவவினைகள் ஏற்படாத வகையில் பெருவாழ்வாய் உலகினில் சகல பாதுகாப்புடன் ஞானமும் பெற்று சிறப்படைவார்கள்.

சகல சிறப்புகளையும் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருமலரடிகளை பயபக்தியுடன் சேவித்து தொடர்ந்து பூஜைகளை மனம் உருகி செய்து வரவர, அவர்களுக்கு இனி பிறவிகள் இல்லாத வாழ்வாய், வாழ்வு அமைவதோடு பேதாபேதம் இல்லாத வாழ்வாய் வாழ்வு அமைவதோடு, பேதாபேதம் நீங்கிய சமநீதி சமதர்ம வாழ்வினை வாழ்ந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அன்பிற்கு ஆளாகி அரங்கனின் அருளாசிகளையும் வல்லமைகளையும் பெற்று வாழ்வினில் தாழ்வுகளே இல்லாத உயர்நிலையை அடைந்து உலகினில் ஞானவாழ்வினை சிறப்புடன் வாழ்ந்து அவர்களது தேவைகள் எல்லாம் முருகப்பெருமானின் திருவருளால் நிறைவேறி கலியுகத்திலும் சகலசௌபாக்கியங்களுடன் தொண்டு பலனினால் அடைந்து சிறப்படைவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பத்ரகிரியார்.

–சுபம்–